**வேலூர் மாவட்டம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி**
**முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**

**ந.க.எண். 970/மாஒ6/ஒபக/பசெகு/2026, நாள். .08.2026**

**பொருள்** : பள்ளிக் கல்வித் துறை – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு நிகழ்வுகள் – பெற்றோர் விழிப்புணர்வுக் கூட்டம் நடத்துதல் – 29.08.2026 அன்று நடத்துதல் – வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் – சார்பு.

**பார்வை** : சென்னை–6, ஒருங்கிணைத் பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.1338/A11/பமேகு/ஒபக/2026, நாள்.24.08.2026.

*********

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, வேலூர் மாவட்டம், 2024–2026 ஆண்டுகளுக்கான பள்ளி மேலாண்மைக் குழுவானது கடந்த 2024 ஆகஸ்ட் மாதம் மறுகட்டமைப்பு செய்யப்பட்டு உறுப்பினர்களின் பதவிக் காலம் 2026 ஆகஸ்ட் மாதம் நிறைவடைகிறது. இந்நிலையில் அனைத்து அரசு தொடக்க/நடுநிலை/உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் 2026–2028 ஆண்டுகளுக்கான பள்ளி மேலாண்மைக் குழுவானது புதிய உறுப்பினர்களைக் கொண்டு மறுகட்டமைப்பு செய்யப்படவுள்ளது.

பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு நிகழ்வுகளில் பள்ளியில் படிக்கும் மாணவர்களின் பெற்றோர்கள் அனைவரும் முழுமையாகப் பங்கேற்பை உறுதிசெய்யும் வகையில் 2026–2028 ஆம் ஆண்டுகளுக்கான பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு நிகழ்வுகள் சார்ந்து பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு கூட்டம் 29.08.2026, சனிக்கிழமை காலை 10 மணி முதல் 1.00 மணி வரை பார்வையில் காணும் செயல்முறைகளில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி எவ்வித புகார்களுக்கும் இடமளிக்கா வண்ணம் அனைத்து வகை அரசுப் பள்ளித் தலைமையாசிரியர்களும் சிறப்பாக கூட்டம் நடத்திட ஏதுவாக பார்வையில் காணும் செயல்முறைகள் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

மேலும் கூட்டம் சார்ந்த புகைப்படத்துடன் கூடிய ஆவணத் தொகுப்பை பள்ளியில் பராமரிக்கவும் அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
மாவட்டத் திட்ட அலுவலகம்,
வேலூர் மாவட்டம்.

இணைப்பு – பார்வையில் காணும் செயல்முறைகள்.

**பெறுநர் –** அனைத்து அரசு தொடக்க / நடுநிலை /உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் (உரிய வழியாக)

**நகல் –**
1. முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் – அவர்களுக்கு கனிவுடன் அனுப்பலாகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்க / இடைநிலை), வேலூர் மாவட்டம்.
3. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.
4. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ), வேலூர் மாவட்டம்.